**வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோவிலில் பன்னிரண்டாம் திருவிழா அன்று (இரவு) புலி விளையாட்டு ஆரம்பித்த வரலாறு**

கீழ்க்காணும் விபரங்கள் அமரர் அ.சித்திரவேலாயுதம் என்பவரால் அதாவது இப் புலி விளையாட்டில் முதன் முதலில் புலி வேடம் ஏற்று நடித்த அப்பாத்துரை அவர்களின் மகனால் **2008ம் ஆண்டு** எழுதித்தரப்பட்ட ஆவணங்களிலிருந்து பெறப்பட்டவை.

" இற்றைக்கு 50 ஆண்டுகளின் முன்பு யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையிலிருக்கும் அம்மன் கோவிலுக்கு இராசகோபுரம் மற்றும் விமானங்களுக்கு வர்ணம் பூசுவதற்காக தென்னிந்தியாவிலிருந்து ஆச்சாரியார் குழுவினர் கோவிலுக்கு வருகை தந்து வேலைகள் செய்து கொண்டிருந்தார்கள்.அந்த வேளையில் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியில் வசித்து வந்த எனது தகப்பனாராகிய சாமிநாதர் அப்பாத்துரை என்பவர் ஆச்சாரியார்களுடன் நெருங்கிப் பழகி வந்தார். எனது தகப்பனார் மிகவும் சுறுசுறுப்பானவர். பாட்டுப்பாடுவதிலும் நாடகங்கள் நடிப்பதிலும் மற்போர் விளையாட்டிலும் தேர்ச்சி பெற்று இருந்தார்.அத்துடன் தென்னிந்தியாவிலிருந்து இங்கு வருகை தந்திருந்த **பல்லுக்கட்டி** என்பவரிடத்தில் கம்பு விளையாட்டும் முறைப்படி கற்று தேர்ச்சி பெற்று இருந்தார்.இந்த வேளையில் அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் சித்திரை மாதத்தில் ஆரம்பமாகியது.அப்போது ஆச்சாரிமார்கள் எனது தகப்பனாரிடம் "அப்பாத்துரை நீங்கள் அம்மன் கோவிலில் பன்னிரண்டாம் இரவுத்திருவிழாவிற்கு நாங்கள் மையினால் புலிவேடம் போட்டு விடுகின்றோம் நீங்கள் விளையாடினால் நன்றாக இருக்கும்" என்று சொல்லி எனது தகப்பனாரின் விருப்பப்படி வேடம் போட்டு அதே வருடத்தில் விளையாடி ஊர் மக்களிடத்தும் மற்றும் வர்ணம் போட்டு விட்டவர்களிடத்திலும் பராட்டுதல்களைப் பெற்றார். இவர் இதனை 1980ம் ஆண்டு வரைக்கும் இடைவிடாது விளையாடி வந்தார். அத்துடன் பின்பு தகப்பனாரின் வயது முதிர்ச்சி காரணத்தினால் அந்தப் புனிதப்பணி நிறைவு செய்யப்பட்டது. எனது தகப்பனார் 1985ம் ஆண்டு ஆடி மாதம் 16ம் திகதி சிவபதம் அடைந்தார்.நான் 1942ம் ஆண்டு சித்திரை மாதம் பிறந்தேன்.எனக்கு அறிவு தெரிந்த போது தகப்பனாரிடம் புலி விளையாட்டு எப்படி ஆரம்பித்ததென்று கேட்டதற்கு தகப்பனார் எனக்கு நேரில் உரைத்தததை இந்தக் கட்டுரையில் எழுதியிருக்கின்றேன்.

நன்றி

| | |
|---|---|
| அ.சித்திரவேலாயுதம் | 2ம் வட்டாரம் சல்லி சாம்பல் தீவு |
| (அண்ணாவியார்- கலாபூஷணம்) | திருகோணமலை |
| | 22.12.2008 |

- ❖ தொகுப்பாசிரியரின் குறிப்பு:- புலி விளையாட்டின் முதல் நிகழ்வு இற்றைக்கு (அதாவது 2018ம் ஆண்டு) 60 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டதாகக் கொள்ளப்படலாம்.

இவ் ஆக்கத்தின் தொகுப்பாளராகிய நான் இவ் விடயம் சம்மந்தமாக எனக்கு தெரிந்தவற்றை பின்வருமாறு கூற விளைகிறேன்.

. புலி விளையாட்டை ஆரம்பித்து வைத்த அமரர் சாமிநாதர் அப்பாத்துரை எனக்கு பெரியப்பா முறையானவர் அத்துடன் எங்களது அயல் வீட்டில் வசித்து வந்தவரும் ஆவார். இதனால் இவர் புலி விளையாட்டுக்குச் செல்லும் பொழுதெல்லாம் இவருக்கு கறுப்பு நிறத்திற்காக கரியும் புலியின் மஞ்சள் கோட்டிற்காக மஞ்சள் நிற, நிறப்பூச்சு (paint) என்பவற்றை பூசி விடுவதற்கு நானும் உதவி செய்வது வழக்கமாக இருந்து வந்தது.

இவருடைய நண்பர்களாகாவும் பனங்கள்ளு பிரியர்களாகவும் இருந்தவர்களுள் சிலர் (எனது ஞாபகப்படி) **அமரர் குழந்தைவேலு** (பத்மநாதனின் (பப்பியின்) தந்தை, **அமரர் அருணாசலம்** (கடந்த காலத்தில் அம்மன் கோவில் மணியமாக சிலகாலம் பணி புரிந்த திரு.இராசரத்தினத்தின் தந்தையார், ஆவார்கள். இவர்கள் தொழில் முடிந்து கம்பர்மலைப் பக்கம் சென்று தமது தாக சாந்தியை முடித்துக்கொண்டு வரும் வழியில் இந்தியாவிலிருந்து வந்து கூடாரம் அமைத்து இங்கு கோபுர வேலை செய்த சிற்பிகளுடனும்,வர்ணம் பூசுபவர்களுடனும் சந்தோசமாக அளவளாவி பகிடிகள் விட்டு செல்வது வழமையாக இருந்து வந்துள்ளது. இவர்களிடையே ஏற்பட்ட இந்த உறவும் அப்பாத்துரையும்,அவரது நண்பர்களிடமும் இருந்த திறமையும் ஒன்று சேர்ந்து இவர்கள் மூலம் ஏதாவது சுவாரஷ்யமான

நிகழ்வொன்றை பன்னிரண்டாம் இரவுத் திருவிழாவிற்கு நடாத்த வேண்டும் என்ற உணர்வைத் தூண்டியுள்ளது.இதற்காக இந்தியாவிலிருந்து வந்த சிற்பிகள் இதிகாசங்கள்,புராணங்கள் மற்றும் அகநானூறு ,புறநானூறு போன்றவற்றில் சித்தரிக்கப்பட்ட சுவாரஷ்யமான நிகழ்வொன்றை தேர்ந்தெடுப்பதற்காக பல நிகழ்ச்சிகளை பரீட்சித்து பார்த்துள்ளனர்.

இறுதியில் நாம் **இணையதளத்திலிருந்து** பெறப்பட்டதும் புறநானூறு இலக்கியத்தில் காணப்பட்டதுமான கீழ்க்காணும கதையை ஆதரமாகக் கொண்டு இவ் விளையாட்டு தேர்ந்தெடுக்கப்பட்டது.

## முறத்தால் புலியை விரட்டிய வீரத் தமிழ் மங்கை

முறம் (அல்லது சுளகு சொலவு) என்பது தானியங்களை உமி, கல் போன்றவற்றிலிருந்து பிரித்தெடுக்க தமிழகத்தின் கிராமப்புறங்களில் பயன்படுத்தப்படும் ஒரு எளிமையான கருவி. இவ்வாறு பிரித்தெடுப்பதை புடைத்தல் என்பர். விவசாயிகளின் இல்லங்களில் இது பரவலாக காணப்படும்.

பண்டைய தமிழ் சமூகத்தில் முறம்:

நெற்கலத்தில் முறத்தைக்கொண்டு நெல்லை ஒரு தமிழ்ப் பெண்மணி தூற்றிக்கொண்டிருந்த பொழுது, புலி ஒன்று தாக்க வந்ததாகவும், அந்த மங்கை புலிக்கு அஞ்சாமல் முறத்தைக் கொண்டே அதை விரட்டியதாகவும் ஒரு கதை வழக்கத்தில் உள்ளது. தமிழ்ப் பெண்களின் பயமின்மைக்கு எடுத்துக்காட்டாக இக்கதையை கூறுவர். இக்கதையின் நினைவாக புலியை முறம் கொண்டு ஒரு தமிழ் மங்கை விரட்டுவது போன்ற ஒரு சிற்பத்தை மாமல்லபுரத்தில் தமிழக அரசு நிறுவியுள்ளது.



பண்டைய பாடல்களில் ஒன்று:

இருந்து முகம் திருத்தி
ஈரொடு பேன் வாங்கி
விருந்து வந்தது என்று விளம்ப
வருந்திமிக
ஆடினாள் பாடினாள்
ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடோடத் தான்.

இக் கதையில் வரும் புலியிடம் அகப்பட்ட தன் வேடுவக் கணவனை அவருடைய மனைவி சுளகு கொண்டு துரத்தி அடித்து காப்பாற்றிய காட்சியை நடிக்க வைத்துப் பார்த்ததில் மிகவும் திருப்தியடைந்தனர். இதற்கமைய கீழ்க் காணப்படுமாறு நடிப்பதற்கான பாத்திரங்கள் தெரிவு செய்யப்பட்டன.

| பெயர் | பாத்திரம் |
|---|---|
| சா.அப்பாத்துரை | புலிவேடம் |
| அமரர் குழந்தைவேலு | வேடுவன் |
| அமரர் அருணாசலம் | வேடுவிச்சி - குறத்தி |

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட இப் புலி விளையாட்டுத் திருவிழா பல பரிமானங்களைக் கடந்து சமகாலத்தில் பின்வரும் கலைகளையும் பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகளைக் கொண்டதாக அமைந்துள்ளதை நாம் காணலாம். மேற்கூறிய கலைஞர்கள் 1980கள் வரை இதை வெற்றிகரமாக நடாத்தி வந்துள்ளனர். இதன் பின்னர் ஆதிகோவிலடியைச் சேர்ந்த அடுத்த பரம்பரையினர் இதை இன்று வரை நடாத்தி வருகின்றனர்.

**புலி விளையாட்டுடன் சேர நடாத்தப்படும் ஏனைய நிகழ்வுகள்**

1. தீப்பந்த விளையாட்டு
2. கம்படி
3. பொம்மலாட்டம்

எமது நாகரிகம் கலை,கலாசாரம்,பண்பாடு என்பவற்றை நாம் உலகின் எப்பகுதியில் வாழ்ந்தாலும் கடைப்பிடிப்பதும் ,பாதுகாப்பதும் பெரும் பணியாக எம்மவரால் கொள்ளப்படுவதால் புலம் பெயர்ந்து பிற நாடுகளில் வசிக்கும் எமது வல்வெட்டித்துறை மக்கள் இப்பாரம்பரியத்தை தத்தமது நாடுகளில் கைக்கொண்டு வருவதை நாம் அறியக் கூடியதாக உள்ளது.

இதற்கமைய வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் போன்ற கோவில்களை பிறநாடுகளில் அமைத்து அதில் இப் புலி விளையாட்டையும் நடாத்தி வருவது மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாகும்.

தொகுப்பாளர்
வல்வை ஜெயம்
ஆதிகோவிலடி
ந.சிவரட்ணம்
ஓய்வு நிலை உதவிப் பொது முகாமையாளர்
இலங்கை வங்கி (BOC)
01-01-2018